**“மழைநீர் சேமிப்போம்”** **“பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் “**

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 20.07.2021.

**<u>நகர்மன்ற அவசரக்கூட்ட அழைப்பிதழ்</u>**

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 பிலவ வருடம், ஆடி மாதம் 09-ம் நாள் 20.07.2021-ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 11.30 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற அவசரக்கூட்டம் நடைபெறும்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி - அல்லிநகரம் நகராட்சி

**<u>பொருள் 01 :</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சி தேனி மாவட்டத்தில் அமைந்துள்ள தேர்வு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சி மூன்றாம் நிலை நகராட்சியாக 10.02.1964 இல் தொடங்கப்பட்டு முறையே 10.02.1972 இல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும், 09.05.1983 இல் முதல் நிலை நகராட்சியாகவும் அரசாணை ( எம்.இ ) 237 ந.நி.ம.கு.வ.துறை நாள். 02.12.2008 இல் முதல் தேர்வு நிலை நகராட்சியாகவும் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி 22.23 சதுரகிலோமீட்டர் பரப்பளவு கொண்டதாகும். 33 வார்டுகளாக நகராட்சி பகுதி பிரிக்கப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை 94453 ஆகும்.

தேனி மாவட்டம் மதுரை மாவட்டத்திலிருந்து பிரிந்து 25.07.1996 ம் G.O.MS No.679 வருவாய் துறை தேனி மாவட்டமாக உதயமானது. இம்மாவட்டத்தில் விவசாய பயன்பாடு அதிகமாக உள்ளது. இந்நகராட்சி எல்லையிலிருந்து 15 கி.மீ சுற்றளவில் சுற்றுலா தளமாக வீரபாண்டி மாரியம்மன் திருக்கோவில் மிகவும் பிரபலமானதாகவும், வைகை அணை, கும்பக்கரை அருவி சிறப்பு வாய்ந்ததாக அமைந்துள்ளது. இம்மாவட்டத்தில் தேனி – அல்லிநகரம் நகராட்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நகரமாக உள்ளது. இந்நகராட்சியை சுற்றி அமைந்துள்ள கிராம மக்கள் சுமார் 50000 பேர் இந்நகராட்சிக்கு வந்து செல்கிறார்கள். இப்பகுதியில் ஸ்பின்னிங் மில், பருப்பு மில் போன்ற தொழில் வர்த்தக நிறுவனங்கள் அமைந்துள்ள நகரமாக உள்ளது.

மேலும் தேனி - அல்லிநகரம் நகராட்சியுடன் பெரியகுளம் நகராட்சி பகுதிகளை இணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1876 / 2021 / எப்1**

**தீர்மான எண் :** 1919
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 02 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2020 - 2021 - ம் ஆண்டின் பொதுநிதியின் கீழ் நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியகுளம் ரோட்டில் அமைந்துள்ள பழைய ஆணையாளர் குடியிருப்பினை முற்றிலுமாக இடித்து அப்புறப்படுத்தும் பணியினை ரூ.1.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கு 02.03.2021-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி பணிகள் செய்வதற்கு கீழ்கண்ட விலை விகிதத்தின்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பணிக்கான மொத்த மதிப்பீடு தொகை ( ரூ ) ( வரிகள் நீங்கலாக ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ( ரூ ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஜி.முரளிதரன், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 110115.12 | 111590.75 | 1.34 % கூடுதல் |
| 2 | திரு.டி.தர்மர், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | | 119818.00 | 8.81 % கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலைவிகிதம் கோரியுள்ள **திரு.ஜி.முரளிதரன்,** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியானது அலுவலக மதிப்பீடை விட 1.34 % கூடுதலாக உள்ளதால் விலை விகிதத்தினை குறைத்து தர கோரியதில் அந்நிறுவனம், பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதர செலவினங்களின் விலைவாசி உயர்வின் காரணமாக ஏற்கனவே மொத்த அலுவலக மதிப்பீட்டினை காட்டிலும் 1.34 % கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை தற்போது மாற்றம் செய்து அலுவலக மதிப்பீட்டினை காட்டிலும் குறைவாக 0.1% இப்பணியினை செய்து தருவதாக தெரிவித்தும், இதற்கு மேல் ஒப்பந்தப்புள்ளியின்

விலைவிகிதத்தினை குறைத்து  கொடுக்க இயலாது என தெரிவித்து கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

இந்நிலையில் மேற்படி பணிக்கு அலுவலக மதிப்பீட்டினை காட்டிலும் குறைவாக ( வரிகள் நீங்கலாக ) ரூ.1,10,004.63/-க்கு ஒப்பந்ததாரர் செய்து தருவதாக கோரிய விலை விகிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

**அ )** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 1209 / 2020 / இ1**

**தீர்மான எண் :** 1920
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 03 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியகுளம் ரோட்டில் புதியதாக ஆணையாளர் குடியிருப்பு கட்டிடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளுவதற்கு 02.03.2021-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்காணும் பணிக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் கோரிய ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்  மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) ( வரிகள் நீங்கலாக )** | **மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம்** |
|---|---|---|---|
| 1 | திரு.ஜி.முரளிதரன், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 4332982.00 | 7.96 % கூடுதல் |
| 2 | **M/s KMC Associates,** தேனி | 4011429.00 | 0.05 % குறைவு |

**<u>அலுவலகக்குறிப்பு</u> :–**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரிய **M/s KMC Associates, Theni** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1210 / 2020 / இ1**

**தீர்மான எண் :** 1921
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 04 :</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 ல் பழைய G.H. ரோடு - ல் உள்ள பழைய அரசு மருத்துவமனையில் ( N.R.T. நினைவு மருத்துவமனை ) தற்போது கொராண நோயாளிகளுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால் தண்ணீரின் தேவை அதிகமாக இருப்பதாலும், நகராட்சி மூலம் வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பு மூலம் சப்ளை செய்யப்படும் குடிநீர் போதுமானதாக இல்லாத காரணத்தினாலும், மருத்துவமணையிலிருந்து தொலைப்பேசி வாயிலாக தண்ணீர் அதிகமாக வழங்கக்கோரியதின் பேரில், மேற்கண்ட மருத்துவமணைக்கு நகராட்சி மூலம் சிறப்பு ஏற்பாடு செய்து டிாக்டர் மூலம் நாள் ஒன்றிக்கு 4 லோடுகள் வரை கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே, இந்நகராட்சியில் உள்ள குடிநீர் வாகனம், மாவட்ட தொழில் மையம், மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகம், குடிநீர் இணைப்புகள் இல்லாத பகுதிகளுக்கு குடிநீர் சப்ளை அன்றாடம் தேவையாக உள்ளதால், மேற்கண்ட மருத்துவமணைக்கு தனியார் மூலம் டிராக்டர்கள் மூலம் செய்யவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ.4,00,000/- ( ரூபாய். நான்கு இலட்சம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணிக்கும், அதற்கான உத்தேசச்செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

அ ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ ) நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ ) தற்சமயம் கொரனா காலமாக உள்ளதால் மேற்கண்ட சப்ளை பணியின் அவசியம் கருதி மன்ற முன் அனுமதி எதிர் நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1883 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 1922
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ, ஆ மற்றும் இஅனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
மற்றும் ஆணையாளர்
தேனி - அல்லிநகரம் நகராட்சி.